# அருட்பாமாலை




## திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்

2, லாசன்ஸ் ரோடு, திருச்சி-620 001.

✆ 0431 - 2461415


Rs. 10/-

1. விநாயகர் துதி ................................ 1

2. கணபதி போற்றி மாலை ................. 1

3. விநாயகர் அகவல் ........................ 2

4. தர்மசாஸ்தா சரணாகதி .................. 7

5. ஐயப்பன் 108 போற்றிகள் ............... 9

6. ஐயப்பன் கவசம் ......................... 17

7. ஐயப்பன் திருப்புகழ் ...................... 25

8. ஹரிவராசனம் - தமிழில் ............... 29

9. மங்களம் .................................... 31

## 1. ஸ்ரீ விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின்  இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்றுகின்றேனே. - ஸ்ரீ திருமூலர்

* * *

## 2. ஸ்ரீ கணபதி போற்றி மாலை

"பாலகணபதி "யின் அருட்பத மலர்கள் போற்றி!
பகர் "தருண கணபதி"யின் பாதங்கள் போற்றி!
சீல "பக்த கணபதி" தம் சீரடிகள் போற்றி!
சீர் "வீரகணபதி"யின் சேவடிகள் போற்றி!
மேல் "சக்தி கணபதி"யின் மெல்லடிகள் போற்றி!
மிளிர் "துவிஜகணபதி"யின் மென் கழல்கள் போற்றி!
பால் "சித்தி கணபதி"யின் பத மலர்கள் போற்றி!
"உச்சிஷ்ட கணபதி"யின் உயர்தாள்கள் போற்றி!
இன்புதரும் "விக்னராஜர்" இணையடிகள் போற்றி!
எழில் "க்ஷிப்ர கணபதி"யின் ஈரடிகள் போற்றி!

கன்னடத்து "ஹேரம்பர்" கழலிணைகள் போற்றி!
கவின் "லக்ஷ்மி கணபதி" யின் கழல் மலர்கள் போற்றி!
நன் "மஹாகணபதி" யின் இணையடிகள் போற்றி!
நல் "விஜய கணபதி"யின் சேவடிகள் போற்றி!
இன்ப "நிருத்த கணபதி"யின் இரு தாள்கள் போற்றி!
"ஊர்த்துவ கணபதி" தாள் போற்றி போற்றி!

⁂ ⁂ ⁂

## 3. விநாயகர் அகவல்

1. **சீ**தக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்

2. **பே**ழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்

3. **நா**ன்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்

4. **சொ**ற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்

5. **தா**யாய் எனக்குத் தான்எழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்துஎன் உளம்தனில்புகுந்து

6. **கு**ருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே

7. **உ**வட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்

8. **க**ருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலம்ஒரு நான்கும் தந்து  எனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே

9. **ஒ**ன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

10. **இ**டைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின்நாவில் உணர்த்திக்

11. **கு**ண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறி வித்தே

12. **அ**முத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்

13. **ச**ண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாகஇனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்

14. **க**ருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிது எனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து

15. **வா**க்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்

16. **எ**ல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி

17. **அ**ணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும்மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

18. **அ**ஞ்சு அக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்துஎனை யாண்ட
வித்தக விநாயகா விரைகழல் சரணே.

❊ ❊ ❊

## 4. ஸ்ரீ தர்மசாஸ்தா சரணாகதி

(லோக வீரம் - மெட்டு)

ஆழி சூழும் பூமியாளும் அற்புதச் சுடரோவியம்!
ஏழிசைப் பொழிலில் பூக்கும் சாஸ்தா நின் சரணாம் புஜம்!!
(ஸ்வாமியே சரணம் ஐயப்பா)

வெற்றி வாளும் வில்லும் அம்பும் பற்றிநிற்கும் திவாகரம்!
நெற்றித்தடாக மலரும் சாஸ்தா நின் சரணாம் புஜம்!!
(ஸ்வாமியே சரணம் ஐயப்பா)

நெடுமேனி நீலவண்ணம் நீயமுத சந்த்ரோதயம்!
கடுவினைப் பாவம் போக்கும் சாஸ்தா நின் சரணாம் புஜம்!!
(ஸ்வாமியே சரணம் ஐயப்பா)

சுருதிகள் தேடி நாடும் சுடரொளிக்கோலம், ஞானப்
பரிதியைப் பூக்கச் செய்யும் சாஸ்தா நின் சரணாம் புஜம்!!
(ஸ்வாமியே சரணம் ஐயப்பா)

நெய்க் கோல வடிவம்; பால பாஸ்கரம் ; வளிதுலங்கும்
மெய்க் கோயிற் பொழில் முகிழ்க்கும் சாஸ்தா நின் சரணாம் புஜம்!!

(ஸ்வாமியே சரணம் ஐயப்பா)

## சரணாகதி

ஏதிலேன் பிழைகள் செய்தேன், ஏழையேன் சரண் புகுந்தேன்!
தாதவிழ் மலர்ச்சரங்கள் தவழும் உன் சரணாம் புஜம்!!

(ஸ்வாமியே சரணம் ஐயப்பா)

## சமஸ்தா பராத மன்னிப்பு

பூதமும் புலனும் ஆளும் புரவலா, பூத நாதா!
யாது. நான் பிழை செய்தாலும் பொறுத்தருள் தேவதேவா!!

(ஸ்வாமியே சரணம் யப்பா)

⁂ ⁂ ⁂

## 5. ஸ்ரீ ஐயப்பன் 108 போற்றிகள்

சுவாமியே போற்றி
அரிஹர சுதனே போற்றி
அச்சன் கோயில் அரசே போற்றி
அன்னதானப் பிரபுவே போற்றி
அமரர் துயர் தீர்த்தவனே போற்றி

அப்பாச்சிமேடே போற்றி
அபயப்பிரதாபனே போற்றி
அதிர்வேட்டுப் பிரியனே போற்றி
அழுதா நதித்தீர்த்தமே போற்றி
அனாத ரட்சகனே போற்றி 10

ஆபத்பாந்தவனே போற்றி
ஆரியங்காவு ஐயாவே போற்றி
இருமுடிப் பிரியனே போற்றி
இராஜசேகரன் மகனே போற்றி
இஞ்சிப்பாறைக் கோட்டையே போற்றி

| | | |
|---|---|---|
| உடும்பாறைக் கோட்டையே | போற்றி | |
| உரக்குழித் தீர்த்தமே | போற்றி | |
| ஊமைக்கருள் புரிந்தவனே | போற்றி | |
| ஊர்க்காவல் கொண்டவனே | போற்றி | |
| எரிமேலி தர்மசாஸ்தாவே | போற்றி | 20 |
| ஏழைப் பங்காளனே | போற்றி | |
| ஏகஜோதியானவனே | போற்றி | |
| ஏகாந்த மூர்த்தியே | போற்றி | |
| ஏற்றமலையில் இருப்பவனே | போற்றி | |
| ஐந்துமலைக்கு அதிபதியே | போற்றி | |
| ஐயப்ப தெய்வமே | போற்றி | |
| ஐம்புலன்களையும் அடக்கியாள்பவனே | போற்றி | |
| ஒன்றே மெய்யென நின்றவனே | போற்றி | |
| ஓரிடத்தில் நிலையானவனே | போற்றி | |
| ஔதாரிய வீரனே | போற்றி | 30 |

கன்னிமூலை கணபதி பகவானே போற்றி
கற்பூர ஜோதியே போற்றி
கலியுக வரதனே போற்றி
கண்கண்ட தெய்வமே போற்றி
கரிமலை வாசனே போற்றி

கரிமலை பகவதியே போற்றி
கல்லிடும் குன்றமே போற்றி
கானக வாசனே போற்றி
காமனை வென்றவனே போற்றி
காருண்ய சீலனே போற்றி 40

காந்தமலை ஜோதியே போற்றி
காளைகட்டி ஆஸ்ரமமே போற்றி
குளத்துப்புழை பாலகனே போற்றி
குழந்தை வடிவானவனே போற்றி
குருவுக்கும் குருவே போற்றி

குருதட்சணை கொடுத்தவனே போற்றி
கொச்சுக் கடுத்த சுவாமியே போற்றி
ஞானச்சுடரே போற்றி
சமஸ்தாபராத ரட்சகனே போற்றி
சத்ய ஸ்வரூபனே போற்றி 50

சர்வமங்கள நாயகனே போற்றி
சரண கோஷப்பிரியனே போற்றி
சர்வரோக நிவாரணனே போற்றி
சபரி பீடமே போற்றி
சபரிக்கு மோட்சம் அளித்தவனே போற்றி

சற்குரு நாதனே போற்றி
சபரிகிரி வாசனே போற்றி
சாந்த ஸ்வரூபனே போற்றி
சின்முத்திரை தாரியே போற்றி
சேவிப்போர்க்கு ஆனந்த மூர்த்தியே போற்றி 60

சோதிச்சுடரே போற்றி

தவக்கோலம் கொண்டவனே போற்றி

தாய்க்குப் புலிப்பால் கொணர்ந்தவனே போற்றி

தாரகப்பிரம்மமே போற்றி

திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப தெய்வமே போற்றி

துளசிமணி மார்பனே போற்றி

தீனதயாளனே போற்றி

நித்ய பிரம்மச்சாரியே போற்றி

நீலிமலைவாசனே போற்றி

நெய் அபிஷேகப் பிரியனே போற்றி 70

பம்பையின் பாலகனே போற்றி

பம்பையின் தீர்த்தமே போற்றி

பந்தள ராஜகுமாரனே போற்றி

பதினெட்டாம் படியோனே போற்றி

பானகப்பிரியனே போற்றி

பாயசன்னப் பிரியனே போற்றி
பாண்டியகுல தீபமே போற்றி
பிரம்மச்சரிய விரதப்பிரியனே போற்றி
பூதநாத ஸ்வாமியே போற்றி
பொன்னம்பல வாசனே போற்றி 80

மணிகண்ட மார்பனே போற்றி
மஹிஷி மர்த்தனனே போற்றி
மகரதீப ஜோதியே போற்றி
மலையாளம் குடி வாழ்பவனே போற்றி
மலைக்கோயில் கொண்டவனே போற்றி

மாளிகைபுரத்து மஞ்சமாதாவே போற்றி
மோகினி சுதனே போற்றி
வன்புலியில் வந்தவனே போற்றி
வாபரின் தோழனே போற்றி
வேட்டைக்கொரு மகனே போற்றி 90

| | |
|---|---|
| வேத கோஷப்பிரியனே | போற்றி |
| வில்லாளி வீரனே | போற்றி |
| வீரமணி கண்டனே | போற்றி |
| ஸ்வாமியின் சந்நிதானமே | போற்றி |
| ஸ்வாமியின் திருவாபரணமே | போற்றி |
| ஸ்வாமியின் பள்ளிக்கட்டே | போற்றி |
| ஸ்வாமியின் மணிமண்டபமே | போற்றி |
| ஸ்வாமியின் பஸ்மக்குளமே | போற்றி |
| ஸ்வாமியின் கற்பூர ஆழியே | போற்றி |
| ஸ்வாமியின் பதினெட்டாம் படிகளே | போற்றி 100 |
| ஸ்வாமியின் பூதகணங்களே | போற்றி |
| ஸ்வாமியின் பழமக்காரே | போற்றி |
| ஸ்வாமியின் கன்னிக்காரே | போற்றி |
| வழித்துணை வரவேண்டும் சுவாமியே | போற்றி |
| பாத பலம் தரவேண்டும் சுவாமியே | போற்றி |

தேகபலம் தரவேண்டும் சுவாமியே போற்றி
பாத தரிசனம் தரவேண்டும் சுவாமியே போற்றி
ஜோதி தரிசனம் தரவேண்டும் சுவாமியே போற்றி 108

அறிந்தோ அறியாமலோ நாங்கள் **எந்தவிதமான தவறும் செய்யாமல் விரத நெறியினை முறையாகக் கடைப் பிடிக்க அருள் புரிய வேண்டும்,** ஓம் சத்தியமான பொன்னு பதினெட்டாம் படியின்மேல் வாழும் சத்திய சந்தன், சபரிகிரீஸ்வரன், அரிஹர சுதன், ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா!

* * *

## 6. ஸ்ரீ ஐயப்பன் கவசம்

### காப்பு

அரிஹர புத்திரனை ஆனந்தரூபனை
இருமூர்த்தி மைந்தனை அறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்தஸ்வரூபனை
தினம் தினம் போற்றிப் பணிந்திடுவோமே
ஐயப்ப தேவன் கவசம் இதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்க தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே

### நூல்

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக 1

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக 2

பூத நாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக 3

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணி கண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக 4

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக 5

பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே 6

சபரிகிரீசனை நினைத்தே நீறிட
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே 7

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர்கள் எல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியில் உள்ளோர் அடிபணிந்தேத்துவர் 8

சரணம் சரணம் ஐயப்பா
சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சற்குருநாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 9

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க 10

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முக பூஜ்யன் நாவினைக் காக்க 11

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க 12

வீரமணி கண்டன் விரல்களைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க 13

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா என் தொடைதனைக் காக்க 14

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூரஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜயகுமாரன் விரல்களைக் காக்க 15

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாள ரூபி காலையில் காக்க
நவக்கிரக நாதன் நடுப்பகல் காக்க 16

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க 17

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க 18

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என் பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க 19

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தன்னை கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திடக் கருணை புரிவாய் 20

பில்லி, சூன்யம், பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரம் எனக்கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய் 21

வாதம், பித்தம், சிலேச்சுமத்துடனே
வாந்தியும், பேதியும், வலிப்பும், சுளுக்கும்
எவ்வித நோயும் எனை அணுகாமல்
என்றுமே காப்பாய் எரிமேலி தேவா 22

கல்வியும், செல்வமும், கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனத்துடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரிகிரீசா 23

காமம், குரோதம், லோபம், மோகம்
மதமாச்சரியம் என்னும் ஐம்பெரும் பேய்கள்
என்றுமே என்னை அணுகவிடாமல்
ஐயப்ப தேவா வரமெனக்கருள்வாய் 24

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம், லோபம், துன்மார்க்கம் இல்லாமல்
வேத நெறியினை விலகி நில்லாமல்
வீரமணி கண்டா வரம் எனக்கருள்வாய் 25

மூப்பும், பிணியும், வறுமையும், பசியும்
வந்தெனை வாட்டி வதை செய்யாமல்
உள்ளன்புடனே உன் திருநாமம்
அனுதினம் சொல்ல அருள்தருவாயே 26

## நமஸ்காரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினென் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ 27

பொன்னம்பலத் துறை புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈன்ற புண்ணியா நமோ நமோ
சுரிகாயுத முடை சுந்தரா நமோ நமோ
மகிஷிமர்த்தனா மணிகண்டா நமோ நமோ 28

சரணம் சரணம் சபரிகிரீஸா
சரணம் சரணம் சத்யஸ்வரூபா
சரணம் சரணம் சர்வதயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்
ஸ்வாமியே சரணம் 29

**ஸ்வாமியே சரணம் ஐயப்பா**

* * *

## 7. ஐயப்பன் திருப்புகழ்

– டாக்டர் சரசுவதி இராமநாதன்

ராகம் : ராகமாலிகை தாளம் : ஆதி

1. கனக மேனியின் இன்னொளி மேவிட
இலகும் ஓர்நகை சிந்தியுலாவிட (செஞ்சுருட்டி)
அளக பாரம் அசைந்திட வேல்விழி மயல்வீச

கவினுலாவிய பெண்மை யெலாம் ஒரு
கவிதையாகி மயங்கிய தோவென (மோஹனம்)
வடிவுமேவி விளங்கிய மோஹினி மனமார

பனிநிலாவொடு கங்கை குலாவிய
சடையுளான் அரவங்களுலாவரும் (புன்னாகவராளி)
அழகு மேனியன் அன்றொரு தாருக வனமீது

புனித ரானவர் தம்குல மாதரின்
மனமெலாம் அழியும் படி தேசுறு (சங்கராபரணம்)
வடிவினான்சிவ சங்கர தேவனும் உறவாட

வனமுலாவிய பம்பையிலே சிறு
மதலையாகி வளர்ந்தவனே கொடு (மாண்டு)
மஹிஷிமாள சரம்தனை ஏவிய சபரீசா!

வரையிலாது வளர்ந்திடு தீவினை
யதனிலே உழலும்படி மாயையில் (முகாரி)
அறிவிலாது மயங்கிடவே எனை விடுவாயோ?

‘எனது, நான்’ எனும் எண்ணமெலாம் அற
இடையறாது மனம்தனிலே பத (சிந்துபைரவி)
சரணமே நிலை நின்றிட நீதிரு அருள்தாராய்!

சபரி மாமலை தங்கிய மோஹன
வரிகள்ஓடிய வன்புலி வாஹன (மத்யமாவதி)
ஹரிஹரா, பதினெண்படி மேவிய பெருமாளே!
(பத சரணமே நிலை நின்றிட நீதிரு அருள்தாராய்)

— — — —

ராகம் : ஹம்சாநந்தி தாளம் : ஆதி

2. (தான தனதான தான தனதான
தான தன தான தனதான)

சீலமறியாது நூலறிவிலாது
சேவடி தொழாது புவிமீதில்

சேல்விழியர் மீது மோக மிக வாழ்வு
சீரழியவாடி உழல்வேனை

நீல நிற ஆடை சூடுமடியாரின்
    நீழலுற நீயும் நினையாயோ!

நீசநிலைபோக வீடுகதி சேர
    ஞான உபதேசம் அருள்வாயே!

சூலனொடு மாயன் சேர உருவான
    பாலக! விசால மணிமார்பா!

சூழு(ம்) மழைமேகம் ஞாயிறு நிலாவை
    மூடு(ம்) மலை மீதில் உறைவோனே!

நாலுமறையோரின் வேத ஒலிசூழ
    நாதவடிவான சபரீசா!

பூதகணநாத! யோக குருநாத!
    ஜோதி மலைமேவும் பெருமாளே!

(நீசநிலைபோக.........................................................
...............................................உபதேசம் அருள்வாயே!)

❊ ❊ ❊

## 8. ஹரிவராசனம் - தமிழில்

– புலவர் இரவி

1. விரியும் வானெலாம் விளங்கவே தினம்
பரிதி ஊர்வலம் ஆராதனை தரும்
அருவி நர்த்தனம் செய்திடும் வனம்
ஐயப்பன் பதம் தேடும் என்மனம்.

2. ஒளி நிலாமுகம் உள்ள மெங்கிலும்
உவகை தந்திடும் ஒளி யுமிழ்ந்திடும்
வளியுலா வரும் வளர்ந்த கானகம்
ஐயப்பன் பதம் தேடும் என்மனம்.

3. கலி தகர்ந்திடும் கனல் நிகர்த்திடும்
களப மேனியோ கவி கொடுத்திடும்
புலியுலா வரும் புதருனும் வனம்
ஐயப்பன் பதம் தேடும் என்மனம்.

4. திசைகள் எட்டிலும் மலை முகட்டிலும்
சரண கோஷமே எதிரொலித் திடும்
திசை மயங்கிடும் இருண்ட கானகம்
ஐயப்பன் பதம் தேடும் என்மனம்.

5. அரிய அனுபவம் அணுகும் பரவசம்
ஐம் புலன்களும் ஐயனின் வசம்
கரியுலா விடும் கதிர் புகாவனம்
ஐயப்பன் பதம் தேடும் என்மனம்.

6. துயர் துடைத்திடும் விழிகள் அம்புஜம்
துளசி மாலைகள் புரளும் திண்புஜம்
கயல் உலாவரும் பம்பையின் வனம்
ஐயப்பன் பதம் தேடும் என்மனம்.

7. சபரி க்ஷேத்ரமே ப்ரம்ம மந்திரம்
சரண கோஷமே ப்ரணவ மந்திரம்
இபம் உலாவரும் வரையெழும் வனம்
ஐயப்பன் பதம் தேடும் என்மனம்.

8. மண்டல வ்ரதம் விரும்பும் தெய்வதம்
மகர ஜோதியாய் தரிசனம் தரும்
அண்டம் யாவையும் ஒடுங்கிடும் வனம்
ஐயப்பன் பதம் தேடும் என்மனம்.

## 9. மங்களம்

பல்லாண்டு ஐந்து மலையோனே
பல்லாண்டு ஹரிஹரன் ஸுதனே
பல்லாண்டு பந்தளன் மைந்தா
பல்லாண்டு மணிகண்டனே
பல்லாண்டு பம்பையின் பாலகா
பல்லாண்டு மஹிஷி மர்த்தனா
பல்லாண்டு பக்தர்தம் கூட்டம்
பெருகட்டும் பாரெங்கும் மங்களம்

* * *





**<u>AUDIO CD</u>**

இப்புத்தகத்தில் அடங்கியவை ஓதுவார் அவர்களால் பாடப்பெற்று Audio CD வடிவில் விற்பனைக்கு உள்ளது.